சுருக்கம்

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் – 04.08.2015 அன்று வாழப்பாடி வட்டம், புதுப்பாளையம் டாஸ்மாக் கடைக்கு சில விஷமிகள் தீ வைத்ததினால் காலமான பணியாளர் திரு. செல்வம் என்பவரது வாரிசுதாரருக்கும், 07.04.2015 அன்று ஆந்திர மாநிலம் சேஷாசல வனப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட கூலித் தொழிலாளி திரு. சசிகுமாரின் வாரிசுதாரருக்கும் அங்கன்வாடி உதவியாளராக கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டது – பின்னேற்பாணை – வெளியிடப்படுகிறது.

---

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந–7(1) துறை

அரசாணை (நிலை) எண்.64

நாள். 01.10.2015
திருவள்ளுவராண்டு 2046
மன்மத, புரட்டாசி 14
படிக்கப்பட்டது:

1 அரசாணை (நிலை) எண்.142, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட (சந–7) த்துறை, நாள் 06.07.2010.
2 அரசாணை (நிலை) எண்.110, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட (சந–7) த்துறை, நாள் 14.05.2012.
3 அரசாணை (நிலை) எண்.43, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட (சந–7) த்துறை, நாள் 28.08.2014.
4 சேலம் மாவட்ட ஆட்சியரின் செ.மு.ந.க.எண்.2115/அ2/2015, நாள் 25.07.2015.
5 சேலம் மாவட்ட திட்ட அலுவலர் (பொ), (ஒ.கு.வ.ப.தி), செ.மு. ந.க.எண்.2215/2015/அ2, நாள் 07.08.2015.
6 மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் 06.08.2015 நாளிட்ட அறிக்கை.
7 சேலம் மாவட்ட ஆட்சியரின் கடித ந.க.எண்.2215/அ2/2015, நாள் 11.08.2015.

----------

ஆணை :

பார்வை 1–இல் படிக்கப்பட்ட அரசாணையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் நிரப்பப்படும் அங்கன்வாடி பணியாளர், குறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் ஆகிய பணியிடங்களை இன சுழற்சி அடிப்படையில் நியமனம் செய்வதற்குரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. பார்வை 2–இல் படிக்கப்பட்ட அரசாணையில் அங்கன்வாடி பணியாளர், குறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் ஆகிய பணியிடங்களை தேர்வு

செய்வதற்கு உரித்தான கல்வித் தகுதி, வயது, தூரச் சுற்றளவு மற்றும் இதர வகையான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. பார்வை 3–இல் படிக்கப்பட்ட அரசாணையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் ஏற்பட்டுள்ள அங்கன்வாடி பணியாளர், குறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் ஆகிய காலிப்பணியிடங்களை நிரப்புவதற்குரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

4. பார்வை 4–இல் படிக்கப்பட்ட சேலம் மாவட்ட ஆட்சியரின், செயல்முறை நடவடிக்கைகளில் சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், பைத்தூர் வடக்கு கிராமம், கல்லுக்கட்டு பகுதியை சேர்ந்த திரு. சசிக்குமார் (லேட்) என்பவரின் மனைவி திருமதி. ரஞ்சிதம் என்பவருக்கு ஆத்தூர் வட்டாரம், கல்லுக்கட்டு குழந்தைகள் மையத்திற்கு அங்கன்வாடி உதவியாளராக பணி நியமனம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. பார்வை 5–இல் படிக்கப்பட்ட சேலம் மாவட்ட திட்ட அலுவலரின் செயல்முறை நடவடிக்கைகளில் திரு. செல்வம் (லேட்) என்பவரின் மனைவி திருமதி. ராதா என்பவருக்கு சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரம், நாவலூர் வள்ளலார் தெருவிலுள்ள குழந்தைகள் மையத்தில் அங்கன்வாடி உதவியாளராக பணி நியமனம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

6. பார்வை 6–இல் படிக்கப்பட்ட செய்திக்குறிப்பில் சில விஷமிகள் சேலம் மாவட்டம் வாழப்பாடி வட்டம், புதுப்பாளையம் டாஸ்மாக் கடை ஷட்டர்களின் இடைவெளியில் பெட்ரோல் ஊற்றி தீ வைத்ததில் ஏற்பட்ட புகையினால் பாதிக்கப்பட்டு, கடைக்குள் அகால மரணமடைந்த டாஸ்மாக் விற்பனையாளர் திரு. செல்வம் என்பவரின் குடும்பத்தின் ஏழ்மை சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு அவரது மனைவிக்கு சத்துணவு மையத்தில் பணி வழங்க உத்திரவிட்டுள்ளார்கள். மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிக்கையில், ஆந்திர மாநிலம், சேஷாசலம் வனப் பகுதியில் 07.04.2015 அன்று நடந்த சம்பவத்தின் போது சுட்டுக் கொல்லப்பட்ட 20 தமிழர்களின் குடும்பத்தினருக்கு அரசுப் பணி வழங்கப்படுமென அறிவித்துள்ளார்.

7. பார்வை 7–இல் படிக்கப்பட்ட கடிதத்தில், சேலம் மாவட்ட ஆட்சியர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கையினை செயற்படுத்தும்பொருட்டு, சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், புதுப்பாளையம் டாஸ்மாக் கடை ஷட்டர்களின் இடைவெளியில் பெட்ரோல் ஊற்றி தீ வைத்ததில் ஏற்பட்ட புகையினால் பாதிக்கப்பட்டு, கடைக்குள் அகால மரணமடைந்த டாஸ்மாக் விற்பனையாளர் திரு. செல்வம் அவர்களின் மனைவி திருமதி. ராதா என்பவர் சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரம், நாவலூர் வள்ளலார் தெருவிலுள்ள அங்கன்வாடி மையத்தில் அங்கன்வாடி உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்றும், ஆந்திர மாநிலம், சேஷாசலம் வனப் பகுதியில் 07.04.2015 அன்று நடந்த சம்பவத்தின் போது சுட்டுக் கொல்லப்பட்ட 20 தமிழர்களில் ஒருவரான சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், பைத்தூர் வடக்கு கிராமம், கல்லுக்கட்டு பகுதியை சேர்ந்த திரு. சசிக்குமாரின் மனைவி திருமதி. ரஞ்சிதம் என்பவர் ஆத்தூர் வட்டாரம், கல்லுக்கட்டு அங்கன்வாடி மையத்தில் அங்கன்வாடி உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்றும், மேற்கண்ட பணி நியமனங்களுக்கு அரசின் விதிமுறைகளை தளர்த்தி அரசின் பின்னேற்பாணை வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

8. சேலம் மாவட்ட ஆட்சியரின் கருத்துருவை கவனமாக பரிசீலித்த அரசு 04.08.2015 அன்று வாழப்பாடி வட்டம், புதுப்பாளையம் டாஸ்மாக் கடைக்கு சில விஷமிகள் தீ வைத்ததினால் காலமான பணியாளர் திரு. செல்வத்தின் மனைவி திருமதி ராதா என்பவருக்கு சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரம், நாவலூர், வள்ளலார் தெருவிலுள்ள அங்கன்வாடி மையத்தில் அங்கன்வாடி உதவியாளராக சேலம் மாவட்ட திட்ட அலுவலரால் பணிநியமனம் செய்யப்பட்டதற்கும், 07.04.2015 அன்று ஆந்திர மாநிலம் சேஷாசல வனப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட கூலித் தொழிலாளி திரு. சசிகுமாரின் மனைவி திருமதி. ரஞ்சிதம் என்பவருக்கு ஆத்தூர் வட்டாரம், கல்லுக்கட்டு அங்கன்வாடி மையத்தில் அங்கன்வாடி உதவியாளராக சேலம் மாவட்ட ஆட்சியரால் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளதற்கும் பின்னேற்பு வழங்கி ஆணைகள் வெளியிடுகிறது.

பொ. சிவசங்கரன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர் (முகூபொ)
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
சென்னை–113.
மாவட்ட ஆட்சியர், சேலம் மாவட்டம்.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
சேலம் மாவட்டம்.
இருப்பிட கணக்கு அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை –600 009
நகல்
சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை முதன்மைச் செயலரின் தனி செயலாளர்,
சென்னை –600 009
இருப்பிட கணக்கு அலுவலர், (சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந2) துறையின் வழியாக)
சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட(சந2) த்துறை, சென்னை –600 009
இருப்பு கோப்பு /உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
1/10/2015